2013 மார்ச் 27]

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

85—

கால்நடை மருத்துவமனை

*__5318__—**திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, பன்னந்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனிதர்களுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி செய்து தர வேண்டும் என்று அறிவுறுத்தியதன்பேரில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பர்கூர் தொகுதி, பன்னந்தூர் ஊராட்சி, பன்னந்தூர் கிராமத்திலே அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வாழ்ந்து வணங்குகின்ற புரட்சித் தாய்! நாம் போற்றி வாழும் புரட்சித் தாய்! அம்மா, தங்கள் பாதம் பதித்த மண்ணில் என்னையும் நடக்கச் செய்து, தாங்கள் வாழ்ந்த வரலாற்று சிறப்பு மிக்க பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் இந்த ஏழைத் தொண்டனை, ஊர் தெரியா, பேர் தெரியா சிற்றூர் கிராமத்தில் பிறந்த என்னை இன்று சான்றோர் பெருமக்கள் உள்ள

இந்தக் கொலு மண்டபத்தில் அமரச் செய்து, தாங்கள் வாழ்ந்து வரலாறு பதித்த அந்த பர்கூர் சட்டமன்றத் தொகுதி மண் உள்ளளவும், மக்கள் உள்ளளவும் அந்த மக்கள் போற்றி வாழ்வார்கள். அப்படிப்பட்ட நற்பல திட்டங்களையெல்லாம் தந்து, இன்று நாடெங்கும் உற்றுப் பார்க்கிற தொகுதி பர்கூர் சட்டமன்றத் தொகுதி என்கிற வகையிலே எனக்கு மக்கள் பணியாற்றிட வாய்ப்பளித்த நான் வணங்குகிற அன்னை! உலக நற்றமிழர்களின் உள்ளங்களிலே நீக்கமற நிலைத்து நின்று வாழ்கிற அன்னை அவர்களே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதி, பன்னந்தூர் ஊராட்சி என்பது 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய மையப் பகுதி. பன்னந்தூர் ஊராட்சி, பாப்பாரப்பட்டி ஊராட்சி, தாமோதரஅள்ளி ஊராட்சி, குடிமேல்அள்ளி ஊராட்சி, வாடமங்கலம் ஊராட்சி ஆகிய 5 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய அந்த மையப் பகுதியான பன்னந்தூர் ஊராட்சி, பன்னந்தூர் கிராமத்தைச் சார்ந்த அத்தனை ஊராட்சிகளிலும், அத்தனை கிராமங்களிலே வாழ்கிற 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். 20 ஆயிரம் ஆடுகள், 10 ஆயிரம் மாடுகள், 8 கோழிப் பண்ணைகள் உள்ளன. ஆக, இந்தக் கால்நடைகளுக்காக நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் வைத்துள்ள கோரிக்கையை நிறைவேற்றி நாகரசம்பட்டியிலே 13 கிலோ மீட்டர் தூரத்திலே கால்நடை மருத்துவமனை, காரிமங்கலத்திலே 11 கிலோ மீட்டர் தூரத்திலே கால்நடை மருத்துவமனை, அரசம்பட்டியிலே 7 கிலோ மீட்டர் தூரத்திலே கால்நடை மருத்துவமனை, ஆக, இங்கே இந்த ஊராட்சியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலான நல்லாட்சிக்கு அந்தப் பகுதி மக்கள் என்றைக்கும் நன்றி உள்ளவர்களாவார்கள். ஆகவே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களே, தங்கள் பாதம் பணிந்து பர்கூர் சட்டமன்றத் தொகுதியின் மக்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.